# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 0952/16/ந மற்றும்
0968/16/ந

ஆணை எண்: 0019/2017

நாள்: 07/02/2017

1. திரு. எஸ். சசிகுமார், DCE.
த/பெ. ஆர். சீனிவாசன்,
9, மண்கட்டி தெப்பக்குளம், மேலூர்,
மதுரை மாவட்டம் – 625 106. – முறையீட்டு மனுதாரர் (அ.ம. 0952/16)

2. திரு. அ. ஜெகநாதன்,
த/பெ. அரசப்பன்,
மந்தை பின்புறம், புதுச்சுக்காம்பட்டி,
மேலூர், மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர் (அ.ம. 0968/16)

1. திரு. செ. சரவணன்,
முன்னாள் நகர் மன்றத் தலைவர்,
மேலூர் நகராட்சி. – எதிர் மனுதாரர் (அ.ம. 0968/16)

2. திரு. சீனிவாசராகவன்,
பொறியாளர்,
மேலூர் நகராட்சி.

3. திரு. சுப்பிரமணி,
வருவாய் ஆய்வாளர்,
மேலூர் நகராட்சி.

– எதிர் மனுதாரர்கள் (அ.ம. 0952/16 மற்றும் 0968/16)

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் திரு. எஸ். சசிக்குமார் என்பவரது முறையீட்டு மனு 12.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0952/16 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனுவில் திரு. எம். சீனிவாசராகவன், முன்னாள் மேலூர் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் பொறுப்பு வகித்தவரும் (தற்போது பத்மநாபபுரம் நகராட்சி பொறியாளர்), திரு. மா. சுப்பிரமணியன், முன்னாள் வருவாய் ஆய்வாளர், மேலூர் நகராட்சி மற்றும் தற்போது அறந்தாங்கி நகராட்சியில் உதவியாளராக பணிபுரிபவர் ஆகிய இருவரும் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

2. முறையீட்டு மனுதாரர் திரு. அ. ஜெகநாதன் என்பவரது முறையீட்டு மனு 16.09.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0968/16 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்மனுவில் மேற்குறிப்பிட்ட இரு எதிர்மனுதாரர்கள் மற்றும். திரு. செ. சரவணன், முன்னாள் நகர் மன்றத் தலைவர், மேலூர் நகராட்சி ஆகிய மூவர் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

3. மேற்படி இரண்டு முறையீட்டு மனுக்களிலும் மேலூர் நகராட்சியில் 12.02.2016 அன்று நடைபெறவிருந்த 4 நகராட்சி கடைகளுக்கான குத்தகை ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது குறித்தும் 01.03.2016 அன்று உரிய பொது அறிவிப்பின்றி ஏலம் நடைபெற்றதாக பொய்யான பதிவேடுகள் தயார் செய்யப்பட்டதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி பொது ஏல விதிப்படி நடைபெறாத ஏலத்தை இரத்து செய்து, பொது ஏல அறிவிப்பு வெளியிட்டு மீண்டும் ஏலத்தை நடத்திட ஆணையிட வேண்டுமெனவும், முறைகேட்டில் தொடர்புடைய அனைவர்மீதும் விசாரணை செய்து சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

4. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுக்கள் குறித்தான எதிர்மனுதாரர்கள் தரப்பிலான விளக்கங்களையும், மேலூர் நகராட்சி ஆணையர் தரப்பிலான பதிலறிக்கையினையும் தாக்கல் செய்திடுமாறு ஆணையிட்டு தனித்தனியே அறிவிப்பாணைகள் இம்முறைமன்ற நடுவத்தால் அனுப்பப்பட்டன. மேலும், முறையீட்டு மனுதாரர்கள் தரப்பிலான விளக்கங்களையும், வாக்குமூலங்களையும் சமர்ப்பித்திட ஏதுவாக விசாரணைக்கு 02.11.2016 அன்று ஆஜராகுமாறு தெரிவித்து முறையீட்டு மனுதாரர்கள் திரு. சசிக்குமார் மற்றும் திரு. அ. ஜெகநாதன் ஆகிய இருவருக்கும் முறையே அ.ம.எண்.0952/16/ந நாள்:5.10.2016 மற்றும் அ.ம.எண்.0968/16/ந நாள்:5.10.2016ன் மூலமாக அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணைகளைத் தொடர்ந்து எதிர்மனுதாரர்களது விளக்கங்கள் வரப்பெற்றன. அதனைத் தொடர்ந்து 02.11.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தின் விசாரணைக்கு ஆஜராகி முறையீட்டு மனுதாரர்கள் கீழ்க்கண்டவாறான தங்களது விளக்கங்களையும்/ வாக்குமூலங்களையும் சமர்ப்பித்தனர்.

திரு. S. சசிக்குமார் அளித்த வாக்குமூலம் :-

*"09.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு என்னால் அனுப்பப்பட்டது. மேலூர் நகராட்சியில் புதிதாக கட்டப்பட்ட நான்கு கடைகளுக்கு முறையாக ஏலம் நடக்கவில்லை. நான்கு கடைகளுக்கும் மெயின் அறிவிப்பு வந்தது. ஏல அறிவிப்பு வந்தவுடன் ஏலத்திற்கு முதல் நாள் காலை 10.30 மணி அளவில் D.D. நகல் எடுத்துக் கொண்டு நகராட்சி ஆணையரிடம் சென்றேன் அன்று ஆணையாளர் இருந்தார். ஆணையாளர் வாங்கி பார்த்துவிட்டு மறு ஏல அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது பார்த்து செல்லுங்கள் என்றார். நான் அந்த அறிவிப்பை போட்டோ எடுத்துக் கொண்டேன். பின்னர் எனக்கு தகவல் தருமாறு மேலூர் நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் இது குறித்து தகவல் கேட்டேன். அதில் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது மற்றும் அதிக தொகைக்கு ஏலம் கேட்டதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கொடுத்தார்கள். அதில் அலுவலக குறிப்பு உள்பட ஏல விவரம், இரத்து செய்த விவரம் மீண்டும் அதிக தொகைக்கு ஏலம் எடுத்த விவரம் இருந்தது. வருவாய் ஆய்வாளர் மட்டும் கவுன்சில் தீர்மானத்திற்கு பரிந்துரை செய்துள்ளார். இதில் நகராட்சி ஆணையர் கையொப்பமிடவில்லை மேலூர் நகராட்சி மேலாளர் மட்டும்*

கையொப்பமிட்டுள்ளார். ஆனால், கடை ஒதுக்கியவர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையில் நகராட்சி ஆணையர் கையொப்பமிட்டுள்ளார். இந்த தகவல் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளேன். அத்துடன் எழுத்து பூர்வமான நகலையும் தாக்கல் செய்துள்ளேன். இத்துடன் ஏலம் இடாமல் ஆவணம் போலியாக தயார் செய்தும் கடைகள் இதுவரை ஒப்படைக்கவில்லை. நகராட்சியினுடைய இச்செயல் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் மனு செய்தேன். ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறைக்கு மனு செய்தேன். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 468-ன் மற்றும் 471-ன் உட்பிரிவுகளின் கீழ் பொருந்தும் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர். பொய்யான பதிவேடுகள் என்று தெரிந்தும் அந்த பதிவேட்டினை பொய்யாக தயார் செய்துள்ளார்கள். இது குறித்து தவறு செய்த அதிகாரிகள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இத்துடன் எழுத்து பூர்வமான ஒரு வாதுரை மற்றும் ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன்."

**திரு. A. ஜெகநாதன் தாக்கல் செய்த வாக்குமூலம் பின்வருமாறு :-**

"10.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு என்னால் அனுப்பப்பட்டது. மேலூர் நகராட்சி அலுவலகத்தில் சுகாதார அலுவலர் கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டப்பட்ட நான்கு கடைகளுக்கு ஏல அறிவிப்பு வந்ததை தொடர்ந்து கொடுப்புத் தொகையை கட்டுவதற்காக தேதி ஞாபகமில்லை. ஏலம் குறிப்பிட்ட நாளன்று சுமார் 10.30 மணி அளவில் நகராட்சி ஆணையாளரிடம் சென்றேன். இன்று ஏலம் இல்லை, என்று சொன்னார்கள். அவர் இன்று ஏலம் இல்லை, பின்பு தேதி தெரிவிக்கிறோம் கலந்து கொள்ளுங்கள் என்று சொன்னார். தலைவரும், துணைத் தலைவரும் ஆளுக்கு இரண்டாக பகிர்ந்து கொண்டார்கள். ஏலத்தொகை கட்டாமலே வைத்துக் கொண்டார்கள். நகராட்சி ஆணையருக்கு D.D.யை போட்டோ காப்பி எடுத்து அனுப்பி வைத்தோம். அவர்களிடமிருந்து பதில் வரவில்லை. நான்கில் ஒரு கடை எனக்கு தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பணம் கட்டினார்களா என்று தெரியவில்லை.

இத்துடன் எழுத்து பூர்வமான ஒரு வாதுரை மற்றும் ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன்."

6. முறையீட்டு மனுதாரர்களால் விசாரணையின் போது தாக்கல் செய்யப்பட்ட வாதுரைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி வாதுரைகளில் பத்தி I-ல் மேலூர் நகராட்சியின் 4 கடைகளுக்கான 12.2.2016 பொது ஏல அறிவிப்பினை "தமிழ் முரசு" நாளிதழ் அறிவிப்பின் மூலமாக தகவல் தெரிந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து மனுதாரர்களது 13.02.2016 நாளிட்ட நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட மனுவில் மேற்படி அறிவிப்பினை "மக்கள் குரல்" நாளிதழில் பார்த்து 11.02.2016 அன்று வங்கி வரைவோலையுடன் சென்று நகராட்சி ஆணையாரிடம் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி கோரி மனு அளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. வாதுரைகளின் பத்தி IV-ல் மேற்படி 4 கடைகளுக்கான பொது ஏலம் குறிதது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட தகவல்களில் 1.3.2016 அன்று 11 மணியளவில் பொது ஏலம் நடைபெற்றதாகவும் அன்றே பொது ஏலத்திற்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு அன்றே ஒப்படைப்பு உரிமம் ஆணையாளரால் வழங்கப்பட்டதாவும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் 01.03.2016 அன்று மேலூர் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளரால் எந்தப் பொது ஏலமும் நடத்தப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. முறையீட்டு மனுதாரர்களால் கூறப்பட்ட தகவல்கள் திரு.வி.ஆர். வேலன் என்ற நபரால் பெறப்பட்டுள்ளன. ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் குறித்த பட்டியலைப் பரிசீலித்ததில் திரு.வி.ஆர். வேலன் என்பவர் 2012-2013ம் ஆண்டுக்கான பேருந்து நிலைய நுழைவு கட்டண வசூல் உரிம ஏலத்தில் கலந்து கொண்டுள்ளது தெரிகிறது. ஆனால் இவரது பெயர் 01.03.2016ல் நடைபெற்ற புகார் எழுப்பப்பட்டுள்ள ஏலத்தில் கலந்து கொண்டவர் பட்டியலில் இல்லை. மேலும், மேற்படி 01.03.2016 பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு குறித்தான பத்திரிக்கை விளம்பர நகல், ஏலத்தில் கலந்து

கொண்டவர்கள் விவரம், ஏல உரிமம் ஒப்படைப்புக்கான ஆணைகளின் நகல்கள், நகர் மன்றத் தலைவரால் 01.03.2016 நாளன்று ஒப்பமிடப்பட்ட முன் அனுமதி, மன்றப் பொருள் நகல் ஆகிய ஆவணங்களின் நகல்களை முறையீட்டு மனுதாரர்களே இணைத்து சமர்ப்பித்துள்ளனர். மேலும், மேற்குறிப்பிட்ட இம்முறையீட்டு மனுக்களில் தொடர்பற்ற திரு.வி.ஆர். வேலன் என்பவருக்கு மேலூர் நகராட்சியிலிருந்து ந.க.எண்.599/2016/எச்.1 நாள்:29.06.2016ல் கேள்வி எண் 1 மற்றும் 2-க்கு அளித்துள்ள பதிலில் மேற்படி 4 கடைகளுக்கான உரிம ஒப்படைப்பு ஆணையின் நகல்கள் மற்றும் நகர் மன்ற பொருள் தீர்மான நகலும் இணைத்து வழங்கப்பட்டுள்ளதாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. மேலும், மேற்படி மன்ற தீர்மானத்திலும் பத்தி 5ல் "மேற்கண்ட இனங்கள் அனைத்தும் நகராட்சிக்கு வருவாய் வரக்கூடிய இனங்களாக இருப்பதாலும் நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் நோக்கிலும், கூடுதல் உச்சவரம்புள்ள ஏலதாரர்களுக்கு 01.03.2016 முதல் 3 ஆண்டுகளுக்கு உரிமம் வழங்க மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிம உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரித்துள்ளது.

10. மேலூர் நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களது கடிதம் ந.க.எண்.2028/16/அ2 நாள்: 24.11.2016-உடன் வரப்பெற்ற எதிர்மனுதாரர்கள் திரு. மா. சுப்பிரமணியன், உதவியாளர், அறந்தாங்கி நகராட்சி மற்றும் திரு. எம். சீனிவாசராகவன் நகராட்சி பொறியாளர் பத்மநாபபுரம் நகராட்சி ஆகியோரது விளக்கங்களில் கீழ்க்கண்டவாறு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"மேலூர் நகராட்சி சிவன் கோவில் தெருவில் பழைய பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலக கட்டிடத்தினை இடித்துவிட்டு தரை தளத்தில் 2 கடைகளும், முதல் தளத்தில் 2 கடைகளும் கட்டப்பட்டு, மேற்படி கடைகளுக்கு ஏலம் விட்டு நகராட்சி நிதி வருவாயை பெருக்க இந்நகர் மன்ற தீர்மான எண்.256, நாள்: 18.01.2016ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கடைகளுடன் பேருந்து நிலைய முகப்பில் சைவ உணவு விடுதி மேல் புறத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒரு கடைக்கும் சேர்த்து அனுமதி பெறப்பட்டது. மேற்படி 5 கடைகளுக்கும் 12.02.2016 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பு 'மக்கள் குரல்' நாளிதழ் மூலம் 20.01.2016ல் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி புகார்தாரர்கள் இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்களோ, முன்னர் ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரரோ இல்லை. மேற்படியார் மக்கள் குரல் நாளிதழ் விளம்பரத்தினைப் பார்த்து ஏலத்தில் கலந்து கொள்ள முன்வந்துள்ளனர்.

12.02.2016 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அலுவலகத்தில் மதுரை மாவட்டத்தினைச் சேர்ந்த 3 நகராட்சிகளுக்கும் தணிக்கைத் தடை நீக்க கூட்டமர்வு நடைபெற இருந்ததால், அன்று நகராட்சியில் நடைபெற இருந்த பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஒத்தி வைக்கப்பட்டது. மேற்படி விபரம் மனுதாரர்களுக்கு தெரியும். மேலும், மனுதாரர்கள் வங்கி வரைவோலை நகல் இணைத்து கடிதம் மட்டுமே கொடுத்திருந்தனர். வங்கி வரைவோலை ஏதும் பெறப்படவில்லை. பின்னர், 01.03.2016 அன்று மேற்படி 5 கடைகளுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெறுமென 'தமிழ்ச்சுடர்' நாளிதழில் 15.02.2016 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டது. 01.03.2016 அன்று நடைபெற்ற ஏலத்தில் 5 கடைகளுக்கும், ஒவ்வொரு கடைக்கும் 2 நபர்கள் வீதம் மொத்தம் 10 ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். அவர்களிடம் உரியவாறு ஒவ்வொரு ஏலதாரரிடமிருந்தும் வைப்புத் தொகை சொத்து மதிப்பு சான்று அல்லது அதற்கு ஈடான வைப்புத் தொகை பெறப்பட்டுள்ளது.

மேற்படி வங்கி வரைவோலைகள் 07.03.2016 அன்று வங்கியில் நகராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேலும், 01.03.2016 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டவர்களில் அதிக ஏலம் கோரியவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கிட பரிந்துரைக்கப்பட்டது. நகர்மன்றப் பொருளில் ஆணையர் அவர்களின் ஒப்பம் பெறப்பட்டுள்ளது. அதன்பின்னர் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு 01.03.2016 அன்றே உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி உத்திரவினை ஏலதாரர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) (திரு. எம். சீனிவாசராகவன்) சிவகங்கை நகராட்சிக்கு பணி மாறுதலில் அன்றே பிற்பகல் பணி விடுவிப்பு பெற்று சென்றுவிட்டார். 04.03.2016 அன்று சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் ஏலதாரர்களுக்கு உரிம ஆணை

வழங்கப்படவில்லை. அதனாலேயே மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கோரியவாறு உண்மை நிலை தெரிவிக்கப்பட்டது. அதன்பின் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டதும் முன் அனுமதிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.283, 284 நாள்:27.05.2016ன் படி அனுமதி பெறப்பட்டது. மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விபரத்தில் மேலாளர் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. மன்றப் பொருள் மன்ற அனுமதி பெறும்பொருட்டு ஆணையாளர் அவர்களால் ஒப்பமிடப்பட்டு மன்றத்திற்கு மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படும். மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் நகர்மன்ற தலைவரால் மன்றப் பொருள் பதிவு செய்யப்பட்டவுடன் மேற்படி மன்றப் பொருள் உண்மை நகலில் மேலாளர் கையொப்பம் இட வேண்டும். அதுதான் நகராட்சியின் நடைமுறையாகும். அதனடிப்படையில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. அதுவே நடைமுறையாகும். ஏலதாரர்களுக்கு உரிமம் 01.03.2016லிருந்து அனுபவிக்கும் வகையில் உரிமைதாரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கடைகளுக்கு 01.03.2016 முதல் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு கணினியில் கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. கடை உரிமதாரர்களும் வாடகை செலுத்தியுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் அரசு விதிகளுக்கு உட்பட்டே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் விதிமீறலோ, முறைகேடோ ஏற்படவில்லை."

11. <u>மேலூர் நகராட்சியின் முன்னாள் நகர்மன்றத் தலைவர் தனது 08.12.2016 நாளிட்ட விளக்க கடிதத்தில் கீழ்க்கண்டவாறான விளக்கங்களைத் தெரிவித்துள்ளார்:-</u>

*"திரு. எஸ். சசிக்குமார், மேலூர் என்பவர் தெரிவித்துள்ள புகாரில் மேலூர் நகராட்சி சிவன் கோவில் தெருவில் பழைய பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலக கட்டிடத்தினை இடித்துவிட்டு தரைத் தளத்தில் 2 கடைகளும், முதல் தளத்தில் 2 கடைகளும் கட்டப்பட்டு, மேற்படி கடைகளுக்கு ஏலம் விட்டு நகராட்சி நிதி வருவாயை பெருக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.256, நாள்:18.01.2016ல் அனுமதி வழங்கப்பட்டது. மேலும், மேற்படி கடைகளுடன் பேருந்து நிலைய முகப்பில் சைவ உணவு விடுதி மேல் புறத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒரு கடைக்கும் சேர்த்து அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி 5 கடைகளுக்கும் 12.02.2016 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பு மக்கள் குரல் நாளிதழ் மூலம் 20.01.2016 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி மனுதாரர் திரு. எஸ். சசிக்குமார் இந்நகராட்சியில் ஒப்பந்ததாரரோ, முன்னர் ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரரோ இல்லை. மேற்படியார் மக்கள் குரல் நாளிதழ் விளம்பரத்தினை பார்த்து ஏலத்தில் கலந்து கொள்ள முன்வந்துள்ளார்.*

*12.02.2016 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அலுவலகத்தில் மதுரை மாவட்டத்தினைச் சேர்ந்த 3 நகராட்சிகளுக்கும் தணிக்கைத் தடை நீக்க கூட்டமர்வு நடைபெற இருந்ததால், அன்று நகராட்சியில் நடைபெற இருந்த பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்-பட்டதாக அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் 01.03.2016 அன்று மேற்படி 5 கடைகளுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் என தமிழ்சுடர் நாளிதழில் 15.02.2016 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டதாக அலுவலகம் மூலம் தெரிந்துகொண்டேன். 01.03.2016 அன்று நடைபெற்ற ஏலத்தில் 5 கடைகளுக்கு ஒவ்வொரு கடைக்கும் 2 நபர்கள் வீதம் 10 ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். அதில் எனது குடும்பத்தினருக்கோ, அல்லது உறவினர் எவருக்கோ ஏலம் கேட்கப்படவில்லை. வெளிநபர்களே ஏலத்தில் கலந்து கொண்டனர். அது குறித்து நகராட்சி அலுவலக விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.*

*மேலும், 01.03.2016 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டவர்களில் அதிக ஏலம் கோரியவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கிட பரிந்துரை செய்து நகர்மன்றப் பொருளில் ஆணையர் அவர்களின் ஒப்பம் பெறப்பட்டு அதன்பின்னர் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் முன் அனுமதி வழங்ககோரி என்னிடம் கோப்பு வரப்பெற்ற போது 01.03.2016 தேதிக்கே உத்திரவு வழங்க முன் அனுமதி வழங்குவதற்கு மன்றப் பொருளில் என்னால் கையொப்பம் வழங்கப்பட்டது. 04.03.2016 அன்று சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் ஏலதாரர்களுக்கு உரிம ஆணை வழங்கப்படவில்லை என அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்பின் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக்*

*கொள்ளப்பட்டதும், மேற்படி முன் அனுமதிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.283, 284 நாள்.27.05.2016ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதில் என்னுடைய தலையீடோ அதிகார துஷ்பிரயோகம் எதுவும் செய்யப்படவில்லை."*

12. இதனிடையே இம்முறை மன்ற நடுவ அழைப்பாணைகள் அ.ம.எண்.0952/16/ந நாள்:09.11.2016 மற்றும் அ.ம.எண்.0968/16/ந நாள்: 09.11.2016ன் படி 09.12.2016 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகி விளக்கங்கள் அளிக்குமாறு எதிர்மனுதாரர்கள் திரு.எம். சீனிவாச ராகவன், முன்னாள் மேலூர் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையர் பொறுப்பு (தற்போதைய நகராட்சி பொறியாளர் பத்மநாபபுரம், நகராட்சி மற்றும் திரு. மா. சுப்பிரமணியன், முன்னாள் வருவாய் ஆய்வாளர் மேலூர் நகராட்சி (தற்போது அறந்தாங்கி நகராட்சியில் உதவியாளர்) ஆகியோருக்கும் மேலூர் நகராட்சி ஆணையருக்கும் ஆணையிடப்பட்டது.

13. <u>அதன்படி 09.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான திரு. மு. சீனிவாச ராகவன், நகராட்சி பொறியாளர் மற்றும் திரு. மா. சுப்பிரமணியன், உதவியாளர் ஆகியோர் கீழ்க்கண்டவாறான தங்களது வாக்குமூலங்களை சமர்ப்பித்துள்ளனர்:-</u>

*"நகராட்சியால் புதிதாக கட்டப்பட்ட 4 கடைகளுக்கு ஏலம் நடைபெற உள்ளது குறித்து 12.2.2016ல் மக்கள் குரல் நாளிதழில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 12.2.2016ம் தேதி மதுரை மாவட்ட உள்ளாட்சி தணிக்கை கூட்டமர்வு இருந்ததால் அன்று ஏலம் நடத்தவில்லை. ஏலம் ஒத்திவைக்கப்பட்டு அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டது. ஆனால், முதல் நாள் அன்று மனுதாரர் நேரில் வந்து கேட்ட பின்பு கடிதம் மூலம் வரைவோலை நகலினை அனுப்பி வைத்தார். ஏலம் ஒத்திவைத்த பின்பு மறு அறிவிப்பு வெளியிடப்பட்டு 1.3.2016 அன்று மீண்டும் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலம் குறித்து தினச்சுடர் என்னும் நாளிதழில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகத்தின் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு கடைக்கும் பகிரங்க ஏலம் நடைபெற்றது. பஸ் நிறுத்தத்தில் உள்ள ஒரு கடையினையும் சேர்த்து மொத்தம் 5 கடைகளுக்கு ஏலம் நடந்தது. ஒரு கடைக்கு தலா 2 நபர்கள் வீதம் மொத்தம் 10 நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் வெவ்வேறு நபர்கள் ஆவர். ஏலத்தில் அதிகபட்சமாக ஏலம் கேட்டவர்களுக்கு ஏலம் விடப்பட்டது. ஏலம் நடைபெற்ற அன்றே நகராட்சி தலைவரின் முன் அனுமதியோடு அதிக தொகை கேட்டவர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமைத் தேர்தல் ஆணையத்தால் சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் 4.3.2016 முதல் நடைமுறைக்கு வந்ததால் தாமதம் மற்றும் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏல நடவடிக்கைகள் இறுதி செய்யப்பட்டன. 27.5.2016ல் மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டது. இவ்வாறு, நகராட்சி தலைவரின் முன் அனுமதியோடு வழங்கப்பட்டதனால் தாமதம் தவிர்க்கப்பட்டு 3 மாதங்களுக்கு மாத வாடகையாக சுமார் ரூ.38,700/- நகராட்சிக்கு வருவாய் வரப்பெற்று நிதி இழப்பீடு தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும், முன்வைப்பு தொகையினை 3 மாதங்களுக்கு முன்பே பெற்றதால் ரூ.22 லட்சத்திற்கான வைப்பு தொகைக்கு 3 மாத வட்டி தொகையும் (4%வட்டி) நகராட்சிக்கு வருவாயாக கிடைத்துள்ளது. மனுதாரர்கள் திரு. ஜெகநாதன் மற்றும் திரு. சசிகுமார் ஆகிய இருவரை தவிர வேறு எவரும் புகார் எதுவும் தெரிவிக்கவில்லை. பொதுவாக ஏல நடவடிக்கையில் நகராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொள்வார்கள். இந்த ஏலத்தில் நகராட்சியில் பதிவு செய்த ஒரு ஒப்பந்ததாரரும் இதற்கு முன்பு நடைபெற்ற ஏலங்களில் கலந்து கொண்ட இருவரும் மற்றும் பிற நபர்கள் 7 பேரும் கலந்து கொண்டார்கள். மேற்குறிப்பிட்ட 2 மனுதாரர்களும் நகராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரராகவோ அல்லது இதற்கு முன்பு ஏலத்தில் கலந்து கொண்டவர்களோ அல்ல. 1.2.2016 நாளிட்ட உள்ளாட்சி நிதி தணிக்கையின் கூட்டமர்வுக்கான கடிதம் வரப்பெற்றது. 18.1.2016ல் ஏலம் குறித்து அறிவிப்பு வழங்கப்பட்டு மாவட்ட செய்தி மக்கள்தொடர்பு அலுவலகம் மூலம் மக்கள் குரல் நாளிதழில் 20.1.2016ல் வெளியிடப்பட்டது. தமிழ் சுடர் என்ற பத்திரிக்கையில் மறு ஏலம் 01.03.2016 நடைபெறுவது*

குறித்து 15.2.2016ல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. முதலில் அறிவிக்கப்பட்டிருந்த ஏல நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டமைக்கான அறிவிப்பு 10.2.2016 அன்று அலுவலக அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டது. மனுதாரர்கள் திரு. ஜெகநாதன் மற்றும் திரு. சசிகுமார் ஆகிய இருவரும் 10.2.2016 நாளன்று பெறப்பட்ட வங்கி வரைவோலைகளை தபாலில் அனுப்பி வைத்தனர். ஆனால், மேற்குறிப்பிட்ட ஒத்திவைக்கப்பட்ட ஏல தேதி குறித்து 10.02.2016 அன்று அலுவலகத்திற்கு அவர்கள் நேரில் வந்து விவரங்களை கேட்டுவிட்டு சென்றனர். இருப்பினும், வங்கி வரைவோலைகளின் நகல்களை தபாலில் அனுப்பியுள்ளார்கள். எனவே, மேற்படி நகராட்சி கடைகளின் ஏலத்திற்கு முறையாக நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு அதன் பின்னர் உரிய நேரத்தில் நகர்மன்ற ஒப்புதல் தீர்மானமும் பெறப்பட்டுள்ளது."

14. எனவே மேற்கண்டவாறான அறிக்கைகள், வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலித்ததில் 01.03.2016 அன்று நடைபெற்ற ஏல நடவடிக்கைகள் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதியுடன் இறுதி செய்யப்பட்டுள்ளதை மேலூர் நகராட்சியின் நகர் மன்ற தீர்மான எண்.283 நாள்:27.05.2016-ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கீழ்க்கண்டுள்ள குறைபாடுகள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டுமென இம் முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விழைகிறது:-

(i) 01.02.2016 நாளிட்ட உள்ளாட்சி தணிக்கை தடை நீக்க கூட்டமர்வுக்கான (12.02.2016) சுற்றறிக்கை வரப்பெற்றும், 12.02.2016 ஏல நடவடிக்கைகளை ஒத்திவைத்தமைக்கான அறிவிப்பினை தாமதமாக 10.02.2016 அன்றே அலுவலக விளம்பர பலகையில் வெளியிட்டது;

(ii) போதிய கால அவகாசமிருந்தும் ஏல ஒத்திவைப்பு குறித்து பத்திரிக்கை விளம்பர அறிவிப்பு வெளியிடாதது;

(iii) மேலூர் நகராட்சி அலுவலக கோப்பு எண்.129/2016 அ2ல் 01.03.2016 ஏல நடவடிக்கைகளின்படி ஏல உரிம ஆணைகளில் நகராட்சி ஆணையரது கையொப்பங்களிருப்பினும், குறிப்பு கோப்புகளில் (பக்கம் 15-18) நகராட்சி ஆணையரது கையொப்பம் இடப்படாதது;

(iv) அதிகபட்ச ஏலத் தொகை கோரியவர்களுக்கு ஏல உரிமத்தினை இறுதி செய்து உரிய முறையில் கையொப்பங்கள் பெற்று ஏல உரிம ஆணைகளை உடனடியாக வழங்காதது;

(v) 01.03.2016ல் நடைபெற்ற மறு ஏலத்திற்கான அறிவிப்பினை வழிகாட்டுதல்களின்படி பொது மக்கள் விரும்பிப் படிக்கும் நாளிதழ்களில் வெளியிடாதது.

மேற்குறிப்பிட்ட குறைபாடுகளே முறையீட்டு மனுதாரர்களது புகார்களுக்கு இடமளித்துள்ளன. எனவே, பொறுப்பான அலுவலர்களிடமிருந்து உரிய விளக்கங்கள் பெறப்பட வேண்டுமென இம்முறை மன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது. இப்பொருள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது விளக்கங்களைப் பெற்று பரிசீலித்து தக்க அறிவுரைகள்/ஆணைகளை வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2017-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை-600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/2/2017

செயலாளர்.

07.02.17

பெறுநர்

1. திரு. எஸ். சசிகுமார், DCE,
த/பெ.ஆர்.சீனிவாசன்,
9, மண்கட்டி தெப்பக்குளம், மேலூர்,
மதுரை மாவட்டம் –625 106.

2. திரு. அ. ஜெகநாதன்,
த/பெ. அரசப்பன்,
மந்தை பின்புறம், புதுச்சுக்காம்பட்டி,
மேலூர், மதுரை மாவட்டம்.

3. திரு. எம். சீனிவாச ராகவன்,
நகராட்சி பொறியாளர்,
பத்மநாபபுரம் நகராட்சி, பத்மநாபபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

4. திரு. மா. சுப்பிரமணியன்,
உதவியாளர்,
அறந்தாங்கி நகராட்சி அலுவலகம்
அறந்தாங்கி, புதுகோட்டை மாவட்டம் - 614 616.

5. திரு. செ. சரவணன், BSc.,
முன்னாள் நகர் மன்றத் தலைவர்,
மேலூர் நகராட்சி, மேலூர்,
மதுரை மாவட்டம் - 625 106.

6. நகராட்சி ஆணையாளர்,
மேலூர் நகராட்சி, மேலூர்,
மதுரை மாவட்டம் - 625 106.

7. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல்:
கோப்பு எண்:0968/16/ந